www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

19.04.98

எண்ணம் 9 கிண்ணம் 4



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நினைவு கொள்வோம்



பிறக்கின்ற ஒவ்வொருவருக்கும் இறப்பு உண்டு. ஆனாலும் அவர்கள் மறைந்து விட்ட போதிலும், மற்றவர்கள் மனதில் நீங்காத நினைவை ஏற்படுத்துவது அவர்கள் செய்த சமூகத் தொண்டு தான். அந்த வகையிலே எங்கள் மறைந்த சிறுவர் அமுதம் மாமா சின்ன இராஜேஸ்வரன் அவர்களும் ஒருவராவார். அன்னார் மறைந்து (19.4.94) நான்காண்டுகள் ஓடி விட்டன. அவர் ஆரம்பித்து வைத்த சிறுவர்களுக்கான சஞ்சிகையானது, தொடர்ந்தும் நம் கைகளில் தவழ்ந்து கொண்டிருப்பது, உண்மையான அவரின் கனவு, ஈடேறி வருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

அவருடைய கடைசி யாத்திரையின் போது கூட, அவர் கரங்களில் எழுதுகோலும், சிறுவர் அமுதம் சஞ்சிகையும் இருந்தது. ஆகவே, அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறைந்தாலும் வேறொரு உருவில் இருந்து எழுதிக் கொண்டிருக்கிறார் என்பதை எண்ணும்போது ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றது. அவர் வளர்த்த சஞ்சிகை மூலமாக வளர்ந்து விட்ட நம் முன்னாள் சிறார்கள் எல்லாம் இளைஞர்களாகி தமிழ் மொழியில் தேர்ச்சியுற்றிருப்பது, அவர் தந்த செல்வம். தமிழ்க் கணனிக்கு ஊக்கம் தந்து, பல இளைஞர்கள் இன்று அதில் தேர்ச்சியுள்ளவர்களாக இருப்பதற்கும் அவரே காரணம்.

ஆகவே, நாமெல்லோரும் அவரின் நான்காவது நினைவு தினத்தை நினைவு கூர்வோம். அவரின் தொண்டினை எண்ணித் தலை வணங்குவோம்.

-முகுந்தன் மகேந்திரன்.

இந்த இதழில் ஆசிரியர் தலையங்கம் இடம் பெறவில்லை. தலையங்கத்தில் இடம் பெற வேண்டிய விஷயத்தை ஆஸ்தான எழுத்தாளர் முகுந்தன் மகேந்திரன் எழுதி விட்டார். அவருக்கு அன்புடன் கூடிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மறைந்த ஆசிரியரின் ஞாபகார்த்தப் பரிசு, போட்டிகளில் பங்கு பற்றியும், ஆக்கங்களை எழுதி அனுப்பியும், சிறுவர்அமுத வளர்ச்சிக்கு உதவும் ஆக்கதாரர்களுக்குக் கிடைப்பதில் பெருமை அடைகிறோம்.

-ஆசிரியை-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

◆◆ சிறுவர் அமுதம் சஞ்சிகையின் ஸ்தாபகரும் தொடக்க கால ஆசிரியருமாகிய சின்ன இராஜேஸ்வரன் மறைந்து நான்காண்டுகளாகி விட்டன. அவரின் ஞாபகார்த்தமாக அவர் எழுதிய கவிதை ஒன்றைத் தருகிறோம். தமிழ் வருடப் பிறப்புக்காக அவர் எழுதிய கவிதை இது.

நாங்கள் ஒன்று சேர்ந்திடுவோம்
நாளும் நன்று செய்திடுவோம்
தீங்கை எதிர்த்து நின்றிடுவோம்-கெட்ட
தீயதை எல்லாம் கொன்றிடுவோம்

ஞாலம் போற்ற வாழ்ந்திடவே,
நல்லதை நாளும் நினைத்திடுவோம்
காலம் விட்ட குறைகளையே
களைந்து எடுப்போம் வாருங்கள்.

உண்மை அன்பு ஆயுதத்தால்
உலகைத் திருத்தும் உறுதியினை
எண்ணத்தினிலே கொள்வோமே
ஏற்றம் காண்போம் வாருங்கள்.

-சின்ன. இராஜேஸ்வரன்-



www.tamilarangam.net

**மகாபாரதம்**



அந்தணனான துரோணன் அரசனாகிய தன்னை அவமானப்படுத்தியதால் மிகவும் வேதனைப்பட்டான் பாஞ்சாலன். அதை விடவும் மக்கள் இல்லாமலும்

www.tamilarangam.net

அவன் வேதனைப்பட்டான். இதனால் தன்னை அவமானப்படுத்திய துரோணாச்சாரியாரைக் கொல்வதற்காக வீரமுள்ள மகனையும், சிறுவனாய் இருந்தும், தன்னைச் சிறைப்படுத்திய அருச்சுனனைத் திருமணம் செய்ய ஒரு மகளையும் பெற்று விட எண்ணினான். அதற்காகத் தன் அரசகுருவிடம் இதைப் பற்றி ஆலோசித்தான்.

அவரின் ஆலோசனைப்படி சிறந்த முனிவர்களை அரண்மனைக்கு அழைத்தான். அவர்களை தன் உபசரிப்பால் சந்தோஷப்படுத்தினான். பின்பு அவர்களிடம் தான் புத்திரகாமேஷ்ட்டி யாகம் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அவனது உபசரிப்பில் மகிழ்ந்த முனிவர்கள் யாகம் செய்துதர ஒப்புக் கொண்டனர்.

அதன்படி பாஞ்சால அரசன் நாட்டில் உள்ள முனிவர்களையும் சேர்த்துக் கொண்டு யாகத்தைத் திறமையாகச் செய்தான். யாகம் செய்ததன் பயனாகப் பாஞ்சாலனுக்கு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குத் "திட்டத்துய்மன்" என்று பெயரிட்டான். சிறிது காலத்தின் பின் பெண்குழந்தை ஒன்றும் பிறந்தது. அக்குழந்தைக்குத் "திரௌபதி" என்று பெயரிட்டான். இரு குழந்தைகளும் அழகாலும், மழலைப் பேச்சாலும் பெற்றோரை மகிழ்வித்தனர்.

நாட்டு மக்களும் தமது அரச வாரிசுக்களைப் பற்றிப் பெருமைப்பட்டனர். திட்டத்துய்மனுக்கு உரிய வயது வந்ததும், பாஞ்சாலன் துரோணாச்சாரியரிடமே மகனை அழைத்து வந்தான். தன் மகனுக்குக் குருவாக இருந்து அவனைச் சிறந்த கல்விமானாகவும், வீரனாகவும் ஆக்கும்படி அவரிடம் கேட்டுக் கொண்டான். துரோணரும் அதற்கு ஒப்புக் கொண்டார். திட்டத்துய்மனும் சிறந்த வீரனாகக் வளர்ந்து வந்தான்.

அதே வேளையில், அஸ்த்தனாபுரத்தில், இளவரசர்கள் எல்லோரும் பெரியவர்களாகி விட்டார்கள். தருமன் என்று அழைக்கப்பட்ட உதிஷ்டிரன் அரசனுக்குரிய குணங்களைப் பெற்றிருந்தமையால், அரசகுருமாரும், வீஷ்மர், விதுரர் போன்ற பெரியவர்களும் தருமனுக்கு முடி சூட்டி அஸ்த்தனாபுரத்தின் அரசனாக அரியணையில் அமர்த்தினார்கள்.

-தொடரும்-

+++++++++++++++++++++++++++++++++++++

எந்த நேரமும் சந்தோ'மாக இருக்க வேண்டுமென்று எவன் பிடிவாதம் பிடிக்காமல் இருக்கின்றானோ, அவன் எந்நேரத்திலும் சந்தோஷமாக இருப்பான்.

-ஸ்டீவன்ஸன்-

+++++++++++++++++++++++++++++++++++++

www.tamilarangam.net



# *சின்ன வயதிலே......*

அது வசந்த காலம். மரத்தில் குருவி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் அதைப் பிடிக்க எண்ணினார்கள். அவர்களில் ஒரு சிறுவன் மெல்ல மரத்தில் ஏறிக் குருவியைப் பிடித்துக் கொண்டான். அப்பொழுதில் இருந்தே குருவி பிடிப்பது அவனுக்குரிய விருப்பப்பட்ட தொழிலாகி விட்டது. விளையாட்டாகி விட்டது.

பறவைகளை வளர்க்க விரும்பும் சிறுவர்கள் அவன் மூலமாகத் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர். பறவைகளைப் பிடிப்பதையோ, அல்லது குஞ்சுகளைப் பிடிப்பதையோ அவன் பாவமாக எண்ணியதில்லை. பிரிந்து அவை கஷ்டப்படுவதையோ அவன் பொருட்படுத்துவதில்லை. அவனைப் பொறுத்தவரை அது அவனது பொழுதுபோக்கு, அவ்வளவே.

ஒரு நாள் பறவை பிடிக்கச் சென்றபோது, அழகிய பறவையைக் கண்டான். அதைத் தான் வைத்திருக்கவும் நினைத்தான். அதற்காகக் கூண்டு ஒன்றை வாங்கினான். அப்பறவையைப் பிடித்துக்

www.tamilarangam.net

கூண்டில் அடைத்துக் கொண்டான். அதைத் தானே வைத்துக் கொண்டான். ஒருநாள் சிறுவன் தன் நண்பர்களுடன் விளையாடச் சென்றான். கூண்டுப்பறவைக்கு உணவு வைக்க மறந்து விட்டான். அவன் வீட்டுக்கு வந்தபோது பறவை இறந்து விட்டது.

அவன் மிகவும் வேதனைப்பட்டான். அவனது வீட்டுப் பெரியவர்கள் அவனைக் கடிந்து கொண்டனர். அவனுக்கு அழுகைஅழுகையாக வந்தது. வேதனையோடு "இனி நான் எந்தப் பறவையையும் நான் பிடிக்கவோ, கூண்டில் அடைக்கவோ மாட்டேன்." என்று உறுதியாகக் கூறினான். அன்று முதல் அவன் பறவைகளைப் பிடிப்பதையே விட்டுவிட்டான்.

அது மட்டுமா! வீதிகளில் கூண்டுப் பறவைகளை விற்பனை செய்பவர்களைக் கண்டால், அவர்களிடம் விலைக்கு வாங்கி விடுதலை செய்து வந்தான். சிறுவன் பெரியவனானான். நாட்டின் சக்கரவர்த்தி கூண்டுப் பறவைகளைப் போல மக்களை நடத்தி வருவதைக் கண்டு வேதனைப்பட்டான். மக்களைத் தன் போதனைகளின் மூலம் புரட்சி செய்து, சக்கரவர்த்தியின் கொடுங்கோல் ஆட்சியில் இருந்து காப்பாற்றினான்.

அவன் யார் என்று நினைக்கிறீர்கள்?. உலகம் போற்றும் மக்கள் தலைவன் லெனின் தான் அவன்.

www.tamilarangam.net

# புத்தகம்



புத்தகம் படித்திட வேண்டும்.
புதியன தெரிந்திட வேண்டும்
இத்தரை மிதினில் நாமே
செழிப்புடன் வாழவே வேண்டும்!

கற்றது கைம்மண் அளவாம்,
கல்வியே அழியாப் பொருளாம்!
கற்றிடு கல்வியை நன்றாய்
கடமைகள் ஆற்றிட உதவும்!

முத்து இரத்தினம் நீங்கள்
முனைந்து நாளும் நீங்கள்
அன்பும் பண்பும் பெறவே
அன்பாய்த் தொடர்ந்து தினமும்



அன்னை தந்தை மகிழ
அகிலம் போற்றிப் புகழ
அறிவியல் நுணுக்கம் பழக
ஆர்வமாய் நூலகம் சென்று

புத்தகம் கற்றிட வேண்டும்
புதியன தெரிந்திட வேண்டும்

மா.பெருமாள்-

www.tamilarangam.net

# பெரியவன்



ஒரு காட்டில் பெரிய மருதமரம் இருந்தது. அந்த மரத்தில் கிளி தன் குஞ்சுகளுடன் வாழ்ந்து வந்தது. எந்த நேரமும் “கீகீ” என்று குஞ்சுகள் சத்தம் போட்டே அக் காட்டில் உள்ள பறவைகள் இரவுக்கு மட்டுமே அந்த இடத்துக்கு உறங்குவதற்கு வரலாயின. தன் பிள்ளைகளின் சண்டையைத் தீர்க்க முடியாமல் தாய்க் கிளிக்கு அழுகையழுகையாக வந்தது. உணவைக் கொடுத்தாலென்ன, படுக்கையைச் சரியாக்கினாலென்ன! எந்த நேரமும் ஒன்றோடொன்று சண்டைதான்.

தாய்க்கிளி தொண்டை கிழியக் கத்திக் கொள்வதுதான் மிஞ்சம். என்ன செய்வது என்றெண்ணிக் கொண்டது. அடுத்தநாள் உணவைத்

www.tamilarangam.net

தேடிக் கொண்டு ஆலமரமொன்றை அடைந்தது. அந்த மரத்தில் காகம் தன் குஞ்சுகளுடன் வாழ்ந்து வந்தது. கிளி சென்றிருந்த வேளையில், தாய் இல்லாமலே காகக்குஞ்சுகள் சண்டை போடாமல் ஒற்றுமையாக இருந்தன. அவைகளைப் பார்க்கக் கிளிக்கு ஆசையாக இருந்தது.

கிளி ஆலமரத்தில் இருக்கும்போதே, காகம் வந்தது. கிளி காகத்திடம் தன் குறைகளைச் சொல்லிக் கலங்கியது. காகம் கிளியுடன் கிளி இருக்கும் இடத்துக்குச் சென்றது. விருந்தாளி வந்திருப்பது கூடப் பொருட்படுத்தாமல், கிளிக்குஞ்சுகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டன. காகம் எல்லாவற்றையும் கவனித்தது. பின் கிளியிடம் நாளை முதல் உன் பிள்ளைகள் சண்டை போடாமல் இருப்பதற்கு நான் வழி செய்கிறேன் என்று கூறி விட்டுச் சென்றது.

அடுத்த நாள் ஒரு கூடையுடன் வந்தது. கூடைக்குள் சில விளையாட்டுச் சாமான்களை வைத்து விட்டுக் கிளியின் முதல் இரண்டு பிள்ளைகளையும் கூடைக்குள் விட்டது. உடனேயே சண்டை ஆரம்பமாகி விட்டது. அண்ணா அடிக்கிறான் அண்ணா குத்தி விட்டான் என்று இளைய குஞ்சு அழுதது. இளைய குஞ்சைத் தூக்கி வெளியே விட்டது. மற்றக்குஞ்சைக் கூட்டினுள் விட்டது. அதுவும் கீக்கீ என்று அழுதது. அதனையும் வெளியே விட்டது. மற்றக் குஞ்சுகளைக் கூட்டினுள் விட்டபோதும் இதே நிலைதான் ஏற்பட்டது.

www.tamilarangam.net

முதல் குஞ்சை மட்டும் கூட்டில் அடைத்தது. இதற்குச் சாப்பாடு கொடுக்காதே என்று கூறியது. கிளிக்குஞ்சு கூட்டுக்குள் இருந்து அழுதது. தாய்க்கிளி எவ்வளவு மன்றாடியும் உணவு கொடுக்க விடவில்லைக் காகம். கிளிக்குஞ்சிடம் உன்னைக் கொண்டு செல்ல வல்லூறு வர இருக்கிறார். அவரிடம் உன்னைக் ஒப்படைத்து விட்டுத்தான் நான் என் கூட்டுக்குச் செல்ல வேண்டும் என்றது. கிளிக்குஞ்சு தான் இனி குளப்படி ஏதும் செய்யவில்லை என்று அழுதது.

வல்லூறும் வந்தது. கூடைக்குள் இருந்த கிளிக்குஞ்சைக் கொத்தித் துன்புறுத்தியது. கிளிக்குஞ்சு கத்தி அழுததைக் கண்டு மற்றக் கிளிக்குஞ்சுகளும் ஏதோ தங்களுக்கும் நடக்கப்போகின்றது என்று அழுதன. தாய்க்கிளிக்கும் வேதனையாக இருந்தது. காகம் வல்லூறைத் தடுத்தது. இனி நல்ல பிள்ளையாக இருப்பதாக கிளிக்குஞ்சு கூறியது. மற்றக்குஞ்சுகளும் தலையாட்டின. அன்று முதல் அந்த மருதமரத்தில் தேவையில்லாமல் சத்தமே கேட்கவில்லை.

சிலநாட்களின் பின் காகம் கிளியின் கூட்டுக்கு வந்தது. கிளி காகத்தைச் சந்தோஷமாக வரவேற்றது. கிளிக்குஞ்சுகள் மரியாதையாகக் காகத்திடம் நடந்து கொண்டன.

-பாமினி அருள்வரதன்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வினாவிடைப்போட்டி

1. சீன நாட்டு நாணயத்தின் பெயர் இது.

   யுத்தம், அத்திவாரம், பன்மை.

2. அடிமை வியாபாரத்தை எதிர்த்த முதல்நாடு இது.

   சுண்டெலி, அன்பு, மார்பு, போர், பக்கம்.

3. வருமானவரியை தொடக்கிய நாடு இது.

   இல்லம், பங்கம், கிடங்கு, பலா, பந்து, துணை.

4. எதிரோப்பியாவின் பழைய பெயர் இது.

   அன்னம், தும்பி, சீதை, பனி, யானை.

5. இலங்கையின் பிரசித்தமான குகை ஓவியங்கள் உள்ள இடம் இது.

   சிலாபம், கிளி, பரிவு, யாத்திரை.

முடிவு திகதி: 15.06.98

www.tamilarangam.net

## வினாவிடைப்போட்டி முடிவுகள்:

சென்ற வினாவிடைப்போட்டியில் இலங்கையின், பிரபலமானவர்களைப் பற்றிய வினாக்களைத் தந்தோம். சிலரைத் தவிர எல்லோருமே விடையைச் சரியாக எழுதியிருந்தார்கள்.

விடைகள் இதோ:

1. சுவாமி விபுலானந்தர்.
2. சி.வை. தாமோதரம்பிள்ளை.
3. ஆறுமுகநாவலர்.
4. செ.சுந்தரலிங்கம்
5. பாலு மகேந்திரா.

| | | |
|---|---|---|
| 1. | முகுந்தன் மகேந்திரன் | Berg.gladbach |
| 2. | ஜெயானந்தன் கண்ணன் | Berg.gladbach |
| 3. | ஜெயதீபா இரத்தினசபாபதி | Eschelbronn |
| 4. | மோகன் இரத்தினசபாபதி | Eschelbronn |
| 5. | ஜெயமாலா இரத்தினசபாபதி | Eschelbronn |
| 6. | கபிலன் பரமசிவம் | Düseldorf |
| 7. | தனுஜா மாசிலா | Saarbrücken |
| 8. | ஜதீஸ் புஸ்பராஜ் | Schweiz |


++++++++++++++++++++++++++++++++++++++++++

நல்ல புத்தகங்களைப் படிப்பது சென்ற நூற்றாண்டுகளில் வாழ்ந்த மிகச் சிறந்த அறிவாளிகளுடன் பேசுவதற்கு நிகராகும்.


-டெஸ்கார்டிஸ்-

++++++++++++++++++++++++++++++++++++++++++

www.tamilarangam.net



## கோழை



அடர்ந்த அந்தச் சிறு காட்டில் மான்கள், முயல்கள், போன்ற மிருகங்களும், காடை,கௌதாரி போன்ற பறவைகளும் வசித்து வந்தன. வேட்டைக்காரர்கள் மான் வேட்டையாட அந்தக் காட்டுக்கு வருவது வழக்கம். அந்தக் காட்டில் நன்றாகப் பெருத்து, பெரிய கொம்புகளுடன் மான் ஒன்று கம்பீரமாகக் காட்டில் திரிந்தது.

தனது அழகிய உருவத்தினால் மான் கர்வம் கொண்டு திரிந்தது. தான் பெரிய வலிமை உள்ளவன் என்றும் எண்ணிக் கொண்டது. ஒருநாள் மான் வரும்போது

www.tamilarangam.net

எதிரில் முயல் ஒன்று எதிர்ப்பட்டது. முயல் மானைப் பொருட்படுத்தாமல் தன்பாட்டில் சென்றது. உருவத்தில் சிறியதான முயல் தன்னை அலட்சியம் செய்தது மானுக்கு அவமானமாக இருந்தது.

"முயலே, என்னைக் கவனிக்காமல் எங்கே செல்கிறாய்? பெரியவனான என்னைத் தெரியவில்லையா? என் வலிமை அறியவில்லையா?" என்று ஆணவத்துடன் கேட்டது. முயல் "அப்படியா சேதி!. உங்களின் வலிமை பற்றி எனக்கு ஏதும் தெரியாது. நீங்களே சொல்லுங்கள்." என்றது.

அதற்கு மான், "என் உடம்பின் "பளபள"ப்பைப் பார்த்தாயா? என் கொம்புகளின் கூர்மையைப் பார்த்தாயா? இக்கொம்புகளினால் எதிரிகளைக் குத்திக் கொன்று விடுவேன். என் கால்களினால் எதிரியை அடித்து விழுத்தி விடுவேன்." என்று பெருமை பேசியது. முயல் மௌனமாகக் கேட்டுக் கொண்டு நின்றது.

www.tamilarangam.net

அந்த நேரத்தில், வேட்டைநாய்களின் சத்தம் தூரத்தில் கேட்டது. மான் மிரண்டு கொண்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஓடியது. முயல் சிரித்தது. பின் தனக்குள், இந்த மான் சொல்லியது என்னவோ உண்மைதான். ஆனால் இந்தத் தகுதிகள் இருந்து என்ன பிரயோசனம். மனத்தில் சிறிதேனும் தைரியம் இல்லையே!" என்று சொல்லிக் கொண்டு தன் வழியே சென்றது.

## சுவாமி ஞானப்பிரகாசர்



ஈழத்துத் தமிழ் அறிஞர்களில் சுவாமி ஞானப்பிரகாசரும் குறிப்பிடத் தக்கவராவர். இவர் ஈழத்தின் வடபகுதியாகிய யாழ்ப்பாணத்தில், மானிப்பாய் என்ற ஊரில் பிறந்தார். இவரது தந்தையார் சுவாமிநாதபிள்ளை. தாயார் தங்கமுத்து. இவருக்குத் தாய்தந்தையர் வைத்த பெயர் வைத்திலிங்கம் என்பதாகும்.

www.tamilarangam.net

இவரது மூன்றாவது வயதிலேயே தந்தை இறந்து போய் விட்டார்.

இவரது தாயார் தம்பிமுத்துப்பிள்ளை என்ற கத்தோலிக்கரை மறுமணம் செய்தார். இதனால் தாயும் மகனும் ஞானஸ்தானம் பெற்றுக் கத்தோலிக்கக் சமயத்தைத் தழுவிக் கொண்டனர். வைத்திலிங்கம் என்ற பெயர் ஞானப்பிரகாசம் என்றானது. இயற்கையாகவே, சமயப்பற்றும், தமிழ்ப்பற்றும் இவருக்கு இருந்தது.

ஆரம்பக் கல்வியை அச்சுவேலி என்னும் ஊரிலும், மானிப்பாயில் ஆங்கிலக்கல்வியையும் கற்றார். பின்னர் யாழ்ப்பாணம் புனிதபத்திராசிரியர் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். ஆங்கில மொழியிலும், தமிழ்மொழியிலும் முதன்மை பெற்றுப் பல பரிசுகளைப் பெற்றுக் கொண்டார்.

கல்லூரிப் படிப்பை முடித்தபின், மத்திய மலைநாட்டு ஊரான நானுஓயாவில் தேயிலைத் தோட்டமொன்றில் கணக்காளராக வேலை செய்தார். தமது சமயப் பற்றின் காரணமாக வேலையை விட்டு விலகி, 1901ஆம் ஆண்டு குருப்பட்டம் தரித்துக் கொண்டார். அன்று முதல் சமயத்துக்கும், தமிழுக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

சமயப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சுவாமிகள் சமூகப் பணியிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். ஏழைகளின் வாழ்வு வளம் பெற

www.tamilarangam.net

அயராது உழைத்தார். அவர் எழுதிய நூல்கள் அவர் தமிழுக்காகச் செய்த பணியினைப் பறை சாற்றும். தமிழ் வரலாற்று ஆராய்ச்சி, தமிழரின் பூர்வீக சரித்திரமும் சமயமும், யாழ்ப்பாண வரலாறு, பண்டைய இந்திய நாகரீகம், தமிழரிடையே சாதி பிறந்த முறை போன்ற நூல்கள் அவர்களால் எழுதப் பட்டன.

ஆனாலும் அவரது தமிழார்வத்தின் வெளிப்பாடாக, "தமிழ்ச் சொற்பிறப்பு அகராதி" என்ற ஆராய்ச்சி நூல் மூலம் தமிழின் தொன்மையையும், சிறப்பையும் உலகுக்கு அறியத் தந்தார் என்று சொன்னால் மிகையாகாது. அந்நிய மொழியின் ஆதிக்கமும், கெடுபிடியும் நிறைந்திருந்த அந்நாட்களில் தாய்மொழிக்காக தன்னை அர்ப்பணித்த சுவாமிகள், பல மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். ஐரோப்பிய மொழிகளில் ஆங்கிலம், ஜேர்மன், பிரஞ்சு, இத்தாலி, ஸ்பானிஸ் போன்ற மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

ஜேர்மன் மொழியில் முழுமையான அகராதியையும் சுவாமிகள் எழுதியது அவரது புலமையை வெளிப்படுத்துகின்றது. ஜேர்மனிய அரசாங்கம் ஞானப்பிரகாசரைக் கௌரவித்து நினைவு முத்திரை வெளியிட்டுக் கௌரவப் படுத்தியது. 1981இல் இலங்கையிலும் முத்திரை வெளியிடப் பட்டது.

-சுரேகா கமலநாதன்-

www.tamilarangam.net

# வல்லவனுக்கு வல்லவன்



காலம் காலமாகச் சிங்கமே காட்டின் அரசனாக இருந்தது. கிழவனாகவும் வந்து விட்டது. இதனால் இளைய தலைமுறையினர் ஆட்சிக்கு வந்தால் நல்லது என்று ஓநாய், கழுதை, கரடி, வேங்கை போன்றன விரும்பின. ஆனாலும் சிங்கத்தின் ஆட்சியையே பெரும்பாலான மிருகங்கள் விரும்பின. இதனால் ஏதும் இவைகளால் செய்ய முடியவில்லை. சிங்கத்துக்குப் பிறந்தநாள் வந்தது.

எல்லா மிருகங்களும் வந்து வாழ்த்துத் தெரிவித்தன. வேங்கை, ஓநாய், கழுதை, கரடி என புதிய ஆட்சியை விரும்பும் மிருகங்களும் வந்திருந்தன. சிங்கம் தன்னை வாழ்த்திய குடிமக்களுக்கு நன்றி கூறியது. பின் வழமை போலக் குடிகளின் குறைகளைக் கேட்டது. எல்லா

www.tamilarangam.net

மிருகங்களும் தங்கள் தங்கள் இனங்களின் குறைகளைக் கூறின. அதற்கான வழிகளை ஆராய்வதாக ராசாவான சிங்கம் உரை நிகழ்த்தியது.

அவ்வேளையில் ஓநாய் மெல்ல எழுந்து "அரசே, ஒரு விண்ணப்பம்." என்று பணிவாகக் கேட்டது. சிங்கம் ஓநாயைப் பார்த்தது. சபையில் சிறிது சலசலப்பு உண்டாயிற்று. பின் ஓநாயைப் பார்த்துத் தலையை ஆட்டியது. ஓநாய் பணிவுடனே, "அரசே! அரச பரம்பரையே தொடர்ந்து ஆளாமல், சிறிது மாற்றம் வேண்டும் என்று மக்கள் சிலர் நினைக்கிறார்கள்." என்று கூறியது. சிங்கம் கோபத்துடன் நிமிர்ந்தது.

அப்போது மந்திரியான நரி அதனை அமைதிப் படுத்தியது. "தேர்தல் மூலம் வாக்கெடுத்துத் தேர்ந்தெடுப்போமே" என்றது நரி. தேர்தல் வைத்தால் தாங்கள் தோற்று விடுவோம் என்று ஓநாய்க்குத் தெரிந்திருந்தது. எனவே, தேர்தல் வேண்டாம். மல்யுத்தம் வைப்போம். யார் வெல்கிறார்களோ அவர்களுக்கு அரசைக் கொடுக்கலாமே." என்றது ஓநாய். அப்போது நரி எழுந்து யாருடன் யார் போட்டியிடுவது? என்று கேட்டது. வேங்கையை எங்கள் பக்கத்தில் தலைவராக்கி இருக்கின்றோம். அவருடன் போட்டி போட வேண்டும். வெல்பவருக்கு மற்றவர் விட்டு விட வேண்டும்." என்றது ஓநாய்.

www.tamilarangam.net

நரி அதை ஆமோதித்து வழி மொழிந்தது. மல்யுத்தம் நடத்துவது எனத் தீர்மானம் எடுக்கப் பட்டது. நாளும் குறிக்கப்பட்டது. தன்னை வெல்ல யாரும் இல்லை என்ற இறுமாப்புடன் வேங்கை இருந்தது. அப்போது அரச சார்பாக நரி எழுந்தது. "பார்வையாளர்களே! எங்கள் அரசரின் சார்பில் நாங்கள் வேறொரு போட்டியாளரைப் போட்டியிட அழைத்திருக்கின்றோம்" என்றது. அப்போது ஓநாய் அரசரே போட்டியிட வேண்டும் என்று வாதிட்டது.

நரி அப்போது போட்டி ஒப்பந்தத்தில் அரசரே தான் போட்டியிட வேண்டும் என்று கூறப்படவில்லையே! என்றது. அதை மற்ற மிருகங்களும் ஆமோதித்தன. தன் பலத்தைப் பெரிதென நினைத்த வேங்கை "பரவாயில்லை. பிரச்சனை வேண்டாம்." என்று கூறி விட்டு மேடையில் ஏறியது. சிங்கத்தின் சார்பில் முள்ளம்பன்றி மேடை ஏறியது. முள்ளம்பன்றியை எப்படி அணைத்துச் சண்டையிடுவது?.

வேங்கை சபையினரைப் பார்த்து, "என் சார்பில் ஓநாயைப் போட்டியிட அழைக்கிறேன்." என்று கூறி விட்டு ஓநாய் இருந்த பக்கம் திரும்பிப் பார்த்தது. ஓநாயை அந்த இடத்தில் காணவில்லை. ஓநாய் வெகுதூரம் சென்று விட்டிருந்தது.

(மூலம்: "காட்டுக்கு யார் ராஜா?" என்ற புத்தகம்)

www.tamilarangam.net

# சொற்களைக் கண்டு பிடியுங்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி | ர | ல் | சொ | ற் | ப | ம் | ப | டு | தெ |
| வே | து | னை | சு | ந் | த | ரி | ட | ம | ன் |
| கா | ம் | பு | று | தி | ம | த | கு | ழை | ஆ |
| ரை | பு | ஈ | சு | ர | று | ற் | கா | வ | ல் |
| ர் | து | வ | று | வ | ந் | த | ன | ம் | ணி |
| கு | வ | ம் | ப் | ம் | ர | க | ம் | ய | தோ |
| ர் | ம் | ன | பு | ன | வி | ல் | ச | ம | ட் |
| ப | ளு | க | ன் | ப | ண் | ம | றை | இ | பு |
| ம் | வ | லை | [illegible] | ல | கு | ம் | மி | ரு | க |
| உ | த | வி | றை | கை | தி | து | உ | ள் | ளி |

முடிவு திகதி: 15.06.98

www.tamilarangam.net

# பாரதிதாசனும் ரசமும்



புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுக்கு ரசம் மிகவும் விருப்பமான உணவு.

"கள்ளென உறைக்கும் ரசம் தெள்ளு தமிழைப் போன்றது" என்று வேடிக்கையாக அவர் கூறுவது வழக்கம். ஒரு சமயம் அவர் உணவகம் ஒன்றுக்குச் சென்று சாப்பிடப் போயிருந்தார். சாப்பிடும் போது ரசம் கொண்டு வரும்படி பரிமாறிக் கொண்டிருந்தவரிடம் கேட்டார். ரசம் முடிந்து விட்டதால், பரிமாறியவர் ரசம் இல்லை என்றார்.

"வெந்நீராவது கிடைக்குமா? என்றார் பாரதிதாசன். சுடச்சுட வெந்நீர் வந்தது. மிளகு தூள், உப்பு கிடைக்குமா? இரண்டுமே வந்தது. வெந்நீருக்குள் கலந்து சாப்பிடத் தொடங்கினார். பரிமாறியவரிடம், "இத்தோடு சிறிதாக நறுக்கிய தக்காளி அவ்வளவே தான்." என்றார் பாரதிதாசன். உடனேயே நறுக்கிய தக்காளியைக் கொண்டு வந்தார் பரிமாறிக் கொண்டிருந்தவர். இதுதானே ரசம். இதைத் தானே தமிழ்ப்பண்பு. கேட்டதையும் தந்து. கேட்காத தக்காளியையும் தந்து அசத்தி விட்டீரே! என்று அவரைப் புகழ்ந்தார் பாரதிதாசன்.

www.tamilarangam.net

# ஒப்பந்தம்



ஒரு ஊரில் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். சிறு வயதிலேயே தாய் தந்தை இறந்து விட்டார்கள். இருவரில் மூத்தவன் படிப்பறிவு இல்லாதவன். ஆனாலும் மூத்தவனான ஆனந்தன் வேலை செய்து பணம் கொண்டு வருவான். தம்பி முரளி வீட்டைக் கவனித்து வந்தான். ஒரு தரம் ஒரு கனவான் வீட்டிற்குச் சென்று ஆனந்தன் வேலை கேட்டான். கனவானோ ஆளை அளவிட்டு வேலை கொடுப்பவர். ஆனந்தனின் தேக பலத்தைக் கண்டதும் அவரின் மூளை நன்றாக வேலை செய்தது.

www.tamilarangam.net

"நான் உனக்கு நாளொன்று ஒரு தட்டு உணவும் ஏழு ரூபாய் சம்பளம் தருகிறேன். தோட்டவேலை செய்கிறாயா?. ஒரு வருடத்துக்கு ஒப்பந்தம் செய்து கொள். வருட முடிவுக்குள் நீ விலகினால், நீ நஷ்டஈடாக ஐந்நூறு ரூபாய் தர வேண்டும். நான் உன்னை விலக்கினால் நான் உனக்கு ஐந்நூறு ரூபாய் தருவேன். சரிதானே!" என்றார். ஆனந்தன் சரி என்று தலையாட்டினான். தோட்டவேலை முழுவதும் ஆனந்தனே செய்து வந்தான்.

தோட்டவேலை மட்டுமல்லாமல் வீட்டுவேலையிலும் பெரிதும் உதவி செய்து வந்தான். ஆனந்தன் செய்யும் வேலைகளால் களைத்து விடுவான். அவனுக்குச் சிறிய தட்டில் உணவு கொடுப்பார்கள். அது அவனுக்குப் போதாமல் இருக்கும். திரும்பக் கேட்டாலும் அவனுக்கு உணவு கிடைப்பதில்லை. ஒப்பந்தப்படி விட்டு விலகவும் அவனால் முடியவில்லை. விலக்கினால் ஐந்நூறு ரூபாய் கொடுக்க வேண்டுமே!" அவன் என்ன செய்வான்?.

எதுவுமே செய்ய முடியாமல் திண்டாடினான். வேலை கூடியதால் கூடப் பசிக்கும். ஆனால் பசிக்குச் சரியான உணவில்லை. அதனால்

www.tamilarangam.net

மெலிந்து போய் விட்டான். இதைத் தம்பியான முரளி கண்டான். ஆனந்தனிடம் விஷயத்தைக் கேட்டான். ஆனந்தன் எல்லா விஷயத்தையும் முரளியிடம் கூறினான். ஒப்பந்தம் எழுதிய பத்திரத்தை வாங்கி வாசித்துப் பார்த்தான். பின் அண்ணனிடம், "இன்று முதல் நீ வேலைக்குப் போக வேண்டாம். நானே போகின்றேன்." என்று கூறினான்.

அடுத்தநாள் கனவானின் வீட்டுக்குச் சென்றான். "அண்ணனுக்குச் சுகமில்லை. அவர் செய்யும் வேலையை நான் செய்ய வந்திருக்கிறேன்." என்றான். கனவானும் முரளியைப் பார்த்தார். நன்றாக வேலை செய்வான் என்று தெரிந்தது. படிப்பைப் பற்றிக் கேட்டார். முரளி தானும் அண்ணனும் படிக்கவே இல்லை என்று கூறினான். கனவான் முரளி வேலை செய்ய ஒப்புக் கொண்டார். முரளி நன்றாக வேலை செய்தான். பின் சாப்பிடக் கூப்பிட்டார்கள். அவன் பெரிய தட்டுடன் சென்று சாப்பிடும் இடத்தில் இருந்தான். பக்கத்தில் ஆனந்தன் சாப்பிட்ட சிறிய தட்டில் உணவு வைத்திருந்தது. "இதில் தான் உன் அண்ணன் சாப்பிட்டான்." என்றாள் சமையல்காரி.

www.tamilarangam.net

ஒப்பந்தப் பத்திரத்தில் ஒரு தட்டுச் சாப்பாடு என்று தானே எழுதியிருக்கிறது. தட்டு பெரிதா? சிறிதா? என்று எழுதவில்லையே. இதோ, பார்." என்று ஒப்பந்தத்தைக் காட்டினான் முரளி. சமையல்காரி படிக்கத் தெரியாதவள். அவள் ஒன்றும் புரியாமல் விழித்தாள். முரளியோ சிறிய தட்டில் சாப்பிட மறுத்தான். கனவான் வந்தார். விஷயம் அறிந்ததும், அவர் அவனிடம் வந்தார். "சொன்னபடி செய்யாவிட்டால் வேலையை விட்டுச் சென்று விடு." என்றார். ஆனந்தனைப் போல முரளியும் படிப்பறிவு இல்லாதவன் என்னும் எண்ணம் பிழையானது என்பதை அவர் அறியவில்லை.

முரளியோ, கனவானிடம் "ஒப்பந்தப்படி பணத்தை நீங்கள் தாருங்கள். நான் சென்று விடுகின்றேன்." என்றான். முரளி ஓரளவு படித்தவன் என்பதைக் கனவான் அறிந்து கொண்டார். அவனிடம் தன் தந்திரம் செல்லாது என்பதையும் அறிந்து கொண்டார். அவனுக்கு நிறைவாக உணவு கொடுக்கும்படி சமையல்காரியிடம் உத்தரவு போட்டார். அன்று முதல் தன் தந்திர வேலையைக் கைவிட்டு விட்டார். ஆனந்தனும் முரளியும் அவர் வீட்டிலேயே வேலை செய்து கொண்டு சந்தோஷமாக வாழ்ந்தார்கள்.

www.tamilarangam.net

# பாசமுள்ள அண்ணன்



அப்பா வந்து விட்டார்-சேந்தன்
அணைத்துக் கொண்டனன்.
மகனின் அன்பைக் கண்டு தந்தை
மிகவும் மகிழ்ச்சி கொண்டனர்.

அன்புடனே அரவணைத்து அமுதும்
அவரை உண்ணக் கொடுத்தவன்
"சொத்தில் அண்ணனுக்குப் பாதி
எனக்கும் பாதி தாரும்." என்றனன்.

"அண்ணன் ஏதும் கேட்கவில்லை,
நீ ஏன் கேட்கிறாய்?- தந்தை
அன்புடனே மகனைக் கேட்டார்.
அப்போ மகனுமே,

"வேறு ஊரில் சென்று வாழும்
விருப்பம் எனக்"கென்றான்.- தந்தை
"வேண்டாமெடா, மகனே" என்று
விதந்துரைத்தனர்.

மறுத்தெதிர்த்துத் தந்தையிடம்
மகனும் உரைக்கவே- தந்தை
மறுக்கவில்லை, சொத்தை
இரண்டு பாதியாக்கினார்.

www.tamilarangam.net

மூத்த மகன் அமுதனுக்குச்
சொத்தில் ஒரு பகுதியும்,
இளைய மகன் சேந்தனுக்குச்
சொத்தில் மறுபகுதியும்

எழுதி விட்டுத் தந்தை- தனது
கிராமம் சென்றனர்- சொத்தைப்
பெற்றுக் கொண்ட சேந்தனுமே
வேறூர் சேர்ந்தனன்.

ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தான்
சேந்தன் தானுமே - சேர்ந்த
நண்பரினால் தீய பழக்கம்
தேடிக் கொண்டானே!

ஆடம்பர வாழ்வில் சொத்தை
அழித்து விட்டானே -சேந்தன்
வருத்தத்துடன் தந்தை வாழும்
கிராமம் வந்தனன்.

தந்தை இறந்து விட்ட செய்தியினை
அமுதன் சொல்லினான்- கேட்டு
அழுத தம்பி தன்னை அண்ணன்
அணைத்துத் தேற்றினான்.

"அப்பா போல நான் இருப்பேன்.
அழாதே!" என்றவன்- தம்பியை
அன்புடனே அரவணைத்தான்- பசிக்கு
அன்ன மிட்டனன்.

தன் சொத்தில் பாதி பகிர்ந்து
அமுதன் கொடுத்தனன்- அண்ணன்
சொல்லைக் கேட்டு நடந்து பாரில்
சேந்தன் உயர்ந்தனன்.

-புலவர் பூங்கோதை-

www.tamilarangam.net

Nektar für die Kinder

Nectar pour les enfants

Nectar for the childrens



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்